ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டுகளின் கீழ்ப்பகுதியில் உள்ள ஆயக்கட்டுப் பகுதியில் தாமிரவருணி ஆற்றுப்பாசன முறையின் கீழ் முன் கார் சாகுபடி செய்யும் திட்டம் நீண்ட காலமாகச் செயலில் இருந்து வந்துள்ளது. பாபநாசம் நீர்த்தேக்கம் கட்டப்பட்ட பின்னர், கோடை மாதங்களில் அந்த நீர்த் தேக்கத்தின் மூலம் கிடைக்கும் மின்சக்தியும் முன் கார் பயிரிடுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

முன் கார் சாகுபடி செய்யும் பிரச்சினைக்குக் கூடுமானவரை இணக்கமான முறையின் தீர்வு காணும் பொருட்டு, தாமிரவருணி ஆற்றுப்பாசன முறையின் மேல்பகுதி, கீழ்ப்பகுதி ஆயக்கட்டு தாரர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், விவசாயிகள் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்ட கூட்டம் ஒன்றைத் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் 8—2—1969-ல் கூட்டினார். கூட்டத்தின் முடிவில் மார்ச் திங்கள் இறுதியில் நீர்த்தேக்கத்தில் உள்ள நீரின் அளவைக் கருத்திற்கொண்டு ஒவ்வோர் ஆண்டும் முன் கார் சாகுபடிக்காக அனுமதிக்கப்படும் பரப்பளவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளே முடிவு செய்ய விட்டுவிடப்பட வேண்டுமென்றும், ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதத் தொடக்கத்தில் தாமிரவருணி ஆயக்கட்டில் விதைப் பாத்திகள் அமைப்பதற்காக ஆற்றுக்கு மேற்பகுதியில் இருக்கும் ஆயக்கட்டு தாரர்களின் தேவையை நிறைவு செய்யப் பாபநாசம் நீர்த் தேக்கத்தில் சுமார் 500 மில்லியன் கன அடி நீர் சேமித்து வைத்திருக்கப்பட வேண்டுமென்றும் அக்கூட்டத்திற்கு வந்த பிரதிநிதிகளும் ஏனையோரும் ஒருமுகமாக ஒப்புக் கொண்டனர். இந்த முடிவின் அடிப்படையில், முன் கார் சாகுபடிக்கான பரப்பை முடிவு செய்யும் பொதுவான பிரச்சினை குறித்து அவசியமான செயற்குறிப்புகளை அரசுக்குத் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பி வைத்தார். இச்செயற் குறிப்புகளை அரசு பரிசீலித்தது. பின்னர், முன் கார் சாகுபடிக்கான பரப்பை முடிவு செய்யும் பொதுவான பிரச்சினை குறித்துப் பொதுப்பணித் துறையின் 12—11—1969 ஆம் நாளிட்ட 2011 ஆம் எண் ஆணையில் கீழ்க்கண்டவாறு அரசு ஆணைகளைப் பிறப்பித்தது :

1. மேல் கால்வாய்ப் பகுதிகளில் முறையான கார் சாகுபடிக்கான விதைப் பாத்திகளை அமைப்பதற்காக பாபநாசம்

1973 மார்ச் 6] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

நீர்த்தேக்கத்தில் ஜூன் 1 ஆம் நாளன்று குறைந்த அளவு 500 மில்லியன் கன அடி நீர் தேக்கி வைத்திருக்கப்பட வேண்டும்.

2. பாபநாசம் நீர்த்தேக்கத்தில் சேமித்து வைக்க எதிர்பார்க்கப்படும் நீரின் அளவு, நீர்த்தேக்கத்தில் உறுதியாகக் கிடைக்கக்கூடிய நீரின் அளவு, கோடை காலத்தில் வரும் நீரின் அளவு, மீண்டும் பெறக்கூடிய நீரின் அளவு, ஏரிகளில் தேக்கி வைக்கப்பட்டுள்ள நீரின் அளவு, கடைக்கோடிப் பகுதிகளுக்கு வரும் நீரின் அளவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாத மத்தியில் முன் கார் சாகுபடிக்கான பரப்பு வரையறுக்கப்பட வேண்டும்.

முன் கார் சாகுபடிக்காக நீர் அளிக்கும்போது கீழ்க்கண்டவாறு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் :--

(i) இருக்கக்கூடிய நீர் 8,124 எக்கருக்கும் குறைவான பரப்பளவிற்கு ('A' வகை நிலங்கள்) மட்டுமே பாசனமளிக்கப் போதுமானதாயிருந்தால் கால்வாயில் நீர் விடுவதற்கும் கால்வாயைப் பராமரித்து வருவதற்கும் உள்ள வசதிக்கேற்பவும், சிக்கனமாக நீரைப் பயன்படுத்துவதற்கேற்றவாறும் தெற்குத் தலைக் கால்வாய்க்கும் வடக்குத் தலைக் கால்வாய்க்குமிடையே உள்ள பகுதியில் முன் கார் பயிருக்காக நீர் விடப்படும்;

(ii) 10,000 எக்கர் 'A' வகை நிலங்களுக்குப் பாசனமளிக்க நீர் இருந்தால், முன் கார் நீர் பெருங்கால் கால்வாயிலிருந்து நேரடியாகப் பாசனம் பெறும் ஆயக்கட்டுக்கும் (உயர் மட்ட மதகுகள் நீங்கலாக) தெற்கு தலைக் கால்வாயிலிருந்து கடம்பா ஏரி வரை நேரடியாகப் பாசனம் பெறும் ஆயக்கட்டுக்கும், கீழ்ப்பிடாகை அணைக்கட்டுக்கு மேற்பகுதியில் ஸ்ரீவைகுண்டம் வடக்குத் தலைக் கால்வாயின் 11 ஆம் எண் மதகின் கீழ்ப் பகுதியில் உள்ள ஆயக்கட்டுக்கும் நீர் வழங்கப்படும்;

(iii) 10,000 எக்கருக்கு மேற்பட்ட பரப்பின் முன் கார் பயிருக்காகப் பாசனமளிக்க நீர் இருந்தால், மேலே (i), (ii) இனங்களின் கீழ்க் குறிப்பிட்ட பகுதிகளோடு, ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டுக் கால்வாய்களின் கீழ்ப் பகுதியிலுள்ள பரப்பையும் பாசனத்திற்காக நிர்வாகப் பொறியாளர் தெரிந்தெடுப்பார். ஆனால், அவ்வாறு தெரிந்தெடுக்கப்படும் பகுதிகளில் குறைந்த அளவு நீரே விரயமாவதாக இருக்க வேண்டியதுடன், பாசனம் பெறுவதற்குத் தொழில் நுட்ப முறையில் மிகவும் வசதி படைத்தனவாக அவை இருக்க வேண்டும்;

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS